# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பில் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை நிரப்புவதற்கான அறிவிக்கை**

அறிவிப்பு எண் : 01/2025 நாள் : 19.01.2026.

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பில் கீழ் ஊதியம் பெறும் பணியிடங்களில் காலியாக உள்ள, கீழ்காணும் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு, தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து 21.01.2026 முதல் 30.01.2026 வரை நேரடியாக / அஞ்சல் வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | **ஈப்பு ஓட்டுநர்** |
|---|---|---|---|
| 1. | ஊதியம் | - | (நிலை - 08) (Level-8) ரூ.19500 - 71900 |
| 2. | வயது 01.07.2025 அன்று (குறைந்தபட்சம்) | - | 18 |
| 3. | 01.07.2025 அன்று அதிகபட்ச வயது | - | 42 |
| 4. | மொத்த பணியிடங்கள் | - | 01 |
| 5. | இனசுழற்சி விவரங்கள் | - | SC (A) (G) - பட்டியல் சாதியினர் (அருந்ததியர்) பொது - PSTM |
| 6. | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | - | 1. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. மோட்டார் வாகன சட்டம் - 1988 (மத்திய சட்டம்-59/1988)-இன் படி தமிழக அரசின் தகுந்த அதிகாரியால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் (With Badge) பெற்றிருக்க வேண்டும்.<br>3. முன் அனுபவம் 5 ஆண்டுகளுக்கு குறையாமல். (அனுபவச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்) |
| 7. | விண்ணப்ப படிவம் | - | விண்ணப்ப படிவம் https://sivaganga.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8. | விண்ணப்ப கட்டணம் | - | ரூ.50/- (Commissioner, Panchayat Union, Kalayarkoil) என்ற பெயரில் ரூ.50/-க்கான வங்கி வரைவோலை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்) |
| 9. | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | - | 21.01.2026 முதல் 30.01.2026 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை (நேரடியாகவோ அல்லது Speed Post மூலமாகவோ விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்) |
| 10. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | - | 30.01.2026 மாலை 05.45 மணி வரை. |
| 11. | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | - | ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் - 630 551. |

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://sivaganga.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், முன் அனுபவச் சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்டுள்ள இன சுழற்சி, வயது, முன் அனுபவம் மற்றும் கல்வித் தகுதி உள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
3. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.
4. சுய முகவரியுடன் கூடிய அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட அஞ்சல் உறை 1 ( 10 x 4 inches postal cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள இன சுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின்படியே நியமனம் மேற்கொள்ளப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த விபரம் அஞ்சல் மூலமாக தெரிவிக்கப்படும்.

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**காளையார்கோவில்.**